செ.வெ.எண் : 18 /ஆகஸ்ட் நாள் : 08.08.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்தின் கீழ் அரசு பணியாளர்களின் பணிப்பதிவேடுகளை கணினிமயமாக்கும் நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து

## கருவூல கணக்குத்துறை முதன்மைச் செயலர் / ஆணையர் திரு.சு.ஜவஹர்,இ.ஆ.ப., அவர்கள்,

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆய்வு

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (08.08.2017) நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் கருவூல கணக்குத்துறை முதன்மைச் செயலர் / ஆணையர் திரு.சு.ஜவஹர்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்தின் கீழ் அரசு பணியாளர்களின் பணிப்பதிவேடுகளை கணினிமயமாக்கும் நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார். இக்கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தில் கருவூல கணக்குத்துறை முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசு, நிதி மேலாண்மை தொடர்பான அரசுப் பணிகள் திறம்பட நடைபெற ,மாநிலஅரசு நிதி மேலாண்மை மற்றும் மாநில அரசு மனிதவள மேலாண்மையை இணைத்து ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. தற்பொழுது நடைமுறையில் உள்ள தன்னியக்க கருவூலப் பட்டியல் ஏற்பளிக்கும் முறை, வலைதள சம்பளப்பட்டியல் மற்றும் மின்னணு வழி ஓய்வூதியம் ஆகியன இத்திட்டத்தில் சேர்க்கப்படவுள்ளன. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக, ரூபாய் 288.91 கோடி அரசு நிதியானது ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு சார்ந்த பல்வேறு துறைகளின் கீழ் சுமார் ஒன்பது இலட்சம் அரசுப் பணியாளர்களின் பணிப்பதிவேடு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் அனைத்து பணிப்பதிவேடுகளும் கணினி மயமாக்கப்பட்டு சம்பளப்பட்டியல், பதவி உயர்வு, பணி மாறுதல், விடுப்பு உள்ளிட்ட அனைத்து விபரங்களும் எளிமையான முறையில் உடனுக்குடன் பதிவு செய்திட வாய்ப்பாக அமையும்.

மேலும் இத்திட்டத்தின் மூலம் மாநிலம் முழுவதிலும் உள்ள சுமார் 23,600க்கும் அதிகமான பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் (Drawing and Disbursing Officers) நேரடியாக இணைய வழியில் சம்பளப்பட்டியலை கருவூலத்திற்கு சமர்ப்பிக்க இயலும். இதன்காரணமாக அரசின் நிகழ்நேர வரவு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மை ஆகியவற்றில் வெளிப்படைத் தன்மை ஏற்படுவதுடன் , நிர்வாகம் சிறப்பாக நடைபெற வழிவகுக்கும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் சுமார் 20,108 அரசு பணியாளர்களின் பணிப்பதிவேடுகள் உள்ளன. இப்பணிப்பதிவேடுகளை கணினிமயமாக்குவதற்கான பணிகள் சம்பந்தப்பட்ட துறை தலைமை அலுவலர்கள் மூலம் மிக தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளை வருகின்ற செப்டம்பர் - 2017க்குள் 100 சதவீதம் நிறைவேற்றிடும் வகையில் அனைத்து துறை அலுவலர்களும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கருவூல கணக்குத்துறை முதன்மைச் செயலர் / ஆணையர் திரு.சு.ஜவஹர்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஓம் பிரகாஷ் மீனா,இ.கா.ப., கருவூலம் மற்றும் கணக்குத்துறை கூடுதல் இயக்குநர் (மின் ஆளுமை) திரு.ஏ.பி.மகாபாரதி, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எஸ்.எஸ்.தனபதி, கருவூலம் மற்றும் கணக்குத்துறை மண்டல இணை இயக்குநர் திருமதி.அ.பாத்திமாசாந்தா, மாவட்ட கருவூல அலுவலர் திரு.அ.கபீபு, நேர்முக உதவியாளர் (கருவூலக்கட்டுப்பாடு) திரு.ம.புவியரசு உள்பட அனைத்துத்துறைகளைச் சார்ந்த பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**

2017 – 18 ஆம் ஆண்டுநிதித்துறைமானியகோரிக்கைஎண் 16 மற்றும் 50–ல் மாண்புமிகுநிதிஅமைச்சர் அவர்கள் கருவூலத்துறைக்காககீழ்க்கண்டஅறிவிப்புகள் செய்துள்ளார்கள்.

1. வாடகைகட்டிடங்களில் இயங்கும் 19சார்நிலைக் கருவூலங்களில் 11சார் கருவூங்களுக்கு 885.72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சொந்தகட்டிடம் கட்டப்படும். மீதமுள்ளஎட்டுசார் கருவூலங்களுக்குஉரிய இடம் தேர்வுசெய்யப்பட்டுவிரைவில் சொந்தக் கட்டிடங்கள் கட்டநடவடிக்கைமேற்கொள்ளபடும்.
2. கருவூலநடைமுறையில் வரவுசெலவுத் திட்டநடைமுறை, அரசுநிதிகளைகையாளுதல்குறித்துகருவூலம் மற்றும் கணக்குத்துறையில் உள்ளஉதவிகணக்குஅலுவலர்,கணக்குஅலுவலர் மற்றும் முதன்மைகணக்குஅலுவலர் நிலையில் உள்ளஅலுவலர்களுக்குபயிற்சிஅளிக்கப்படும்.
3. பொதுத்துறைவங்கித் திட்டத்தின் மூலம் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்கள் ஓய்வூதியம் பெறுதல் மற்றும் நேர்காணலில் தாமதங்கள் போன்றபல இடர்பாடுகளைதவிர்க்கும் பொருட்டுசுமார் 79,000 ஓய்வூதியர்கள் கருவூலம் வழியாகஓய்வூதியம் பெறநடவடிக்கைமேற்கொள்ளப்படும்.
4. ஓய்வூதியர்கள் மாதாந்திரஓய்வூதியம் அவர்களின் வங்கிகணக்கில் வரவுவைக்கப்பட்டவிவரம்,வருடாந்திரஓய்வூதியவிவரம்,ஓய்வூதியர்கள் நேர்காணல் விவரம் போன்றஓய்வூதியர்களுக்குதேவையானஅனைத்துவிவரங்கள் மற்றும் தேவையானபடிவங்கள் அனைத்தும் எளிதில் பெறஓய்வூதியர் தரவுதளம் ஒன்றுஉருவாக்கப்படும்.

மேலும் கடந்த 2016–2017ம் நிதியாண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.662.13கோடி அரசுஊழியர்களுக்கான ஊதியமும்,ரூ.363.34கோடி ஓய்வூதியமும்,ரூ.566.05கோடிஅரசுத்திட்டச் செலவினமும் கருவூலம் மற்றும் கணக்குத் துறையின் மாவட்டம் முழுவதும் உள்ளஎட்டுகருவூலஅலுவலகங்கள் மூலம் மேற்கண்டதொகைசிறப்பானமுறையில் சம்மந்தப்பட்டஅலுவலர்கள் மற்றும் பணம் பெறும் அலுவலர்களுக்கும் வங்கிகணக்கில் நேரடியாகவரவுவைக்கப்பட்டது. மேலும் அரசின் வரவினமாக இந்நிதியாண்டில் மட்டும் இராமநாதபுரம்மாவட்டத்தில் ரூ.291.64கோடிஅரசுக்கணக்கில் கருவூலங்கள் வழியாகமேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2. ஓய்வூதியர்களுக்கானவருடாந்திரநேர்காணல்

தமிழகம் முழுவதும் சுமார் 6.60 இலட்சம் ஓய்வூதியர்கள் கருவூலம் மூலமாகஓய்வூதியம் பெறுகின்றனர். ஓய்வூதியர்கள் அனைவரும் தங்கள் உயிர் வாழ் விபரத்தினைவருடந்தோறும்

கருவூலத்தில் தெரிவிக்கவேண்டும். ஓய்வூதியர்களுக்கானவருடாந்திரநேர்காணல் ஒவ்வொருவருடமும் ஏப்ரல் மாதம் முதல் சூன் மாதம் வரைதமிழகம் முழுவதும் 31 மாவட்டகருவூலங்கள், 238 சார்கருவூலங்கள் மற்றும் சென்னைஓய்வூதியம் வழங்கும் அலுவலகம்உட்படமொத்தம் 270 மையங்களில் நடைபெறும்.

இவ்வருடம் இராமநாதபுரம்மாவட்டத்தில் உள்ள10,951ஓய்வூதியர்களின் நேர்காணலுக்காக உாிய வசதிகள் மாவட்டகருவூலம் மற்றும் 8சார்நிலைக் கருவூலங்களில் செய்யப்பட்டு இருந்தது.

இது தவிரஇவ்வருடம் முதல் ஜீவன் பிரமான் என்றமத்தியஅரசின் இணையதளம் மூலம் மின்னனுஉயிர் வாழ் சான்று(Digital Life Certificate) பெற்றுகருவூலத்தில் பதிவுசெய்துகொள்ள கூடுதல் வசதிஏற்படுத்தப்பட்டு இருந்தது. இதற்காகதமிழகஅரசு இ—சேவை(E-Seva)மையங்கள் மூலம் பதிவுசெய்யநடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுஇருந்தது. இதன் மூலம்ஓய்வூதியதாரர்கள் தற்போதுவசிக்கும் இடங்களுக்குஅருகாமையில் உள்ளஇ—சேவை(E-Seva)மையங்கள் மூலம் கருவூலத்திற்குசெல்லாமலேயேதங்கள் வாழ்வுச்சான்றினைசமர்ப்பிக்கலாம். மேலும் இணையதளவசதிகள் மற்றும் விரல்ரேகைபதிவு(Finger Print Reader)வசதிகள் இருப்பின் உலகின் எந்த இடத்திலிருந்தும் மின்னனுஉயிர் வாழ்வுச் சான்றினைகருவூலகத்திற்குஅளிக்க இயலும். இவ்வசதியைபயன்படுத்திநேர்காணலைமுடித்துக் கொள்ளவும்,தங்கள் வீண் அலைச்சலைதவிர்ப்பதோடு,நேரத்தையும் சேமிக்கலாம் எனமுதன்மைசெயலர் மற்றும் கருவூலக் கணக்குத் துறைஆணையர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

3.**ஓய்வூதியர்களுக்குஅரசுஅடையாளஅட்டை**

தமிழ்நாடுஅரசின் மூலம் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள்,குடும்பஓய்வூதியதாரர்களுக்குஅரசுஅடையாளஅட்டைவழங்கஅரசாணைபிறப்பிக்கப்பட்டுள்ளது.ஓய்வூதியர்களுக்கானஅடையாளஅட்டைஅரசுஇ—சேவைமையங்கள் மூலம் விரைவில் வழங்கப்படும்.

அடையாளஅட்டையில் இடம் பெறவேண்டியவிவரங்கள் குறித்தபடிவமும் வெளியிடப்பட்டுள்ளது. எனவேகருவூலம் மூலம் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள்,குடும்பஓய்வூதியதாரர்கள் அதற்கானபடிவத்தில் கோரப்பட்டுள்ளவிவரங்களைநிறைவுசெய்துகருவூலத்தில் அளிக்கவேண்டும்.

மேற்கண்டபூர்த்திசெய்யப்பட்டபடிவத்தைதொடர்புடையகருவூலத்தில் நேரிலோ,அஞ்சல் மூலமோஅல்லதுதனிநபர் மூலமாகவோஅளிக்கலாம்.

இப்படிவத்தைத் தமிழ்நாடுஅரசு இணையதளத்தில் அரசாணையுடன் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்அல்லதுஇராமநாதபுரம் மாவட்டகருவூலம் மற்றும் அனைத்துசார் கருவூலங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். இராமநாதபுரம் மாவட்டத்தில் 5544 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது.

**4.வறட்சிநிவாரணநிதிஅனுப்புதல்**

இவ்வருடம் தமிழகம் முழுவதும் வறட்சிநிவாரணநிதியாகரூ.26.61 இலட்சம் பயனாளிகளுக்குரூ.1790.19 கோடிகருவூலங்கள் வழியாகபயனாளிகளுக்குமின்னனு தீர்வை(ECS) மூலம் அனுப்பப்பட்டுள்ளது. இராமநாதபுரம்மாவட்டத்தில் மட்டும் 1,40,275பயனாளிகளுக்குரூ.145.88கோடிகருவூலம் மூலமாகஅனுப்பப்பட்டுள்ளது.